©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 7.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 150A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜூன் 23, 2009
ஆனி 9, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2009—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2009**

**வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதற்கும் வேளாண்மை மன்றத்தை அமைப்பதற்கும் வேளாண்மை அல்லது தோட்டக்கலையில் தகுதிப்பாடு பெற்றுள்ள நபர்களின் பதிவேட்டினைப் பேணி வருவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதற்காக வகை முறைகளைச் செய்வதும், அந்நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநிலத்திற்காக வேளாண்மை மன்றத்தை அமைப்பதற்கும் வேளாண்மை அல்லது தோட்டக்கலையில் தகுதிப்பாடு பெற்றிருக்கின்ற நபர்களுக்கான பதிவேட்டினைப் பேணி வருவதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்குத் துணைமையான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வது உகந்ததெனக் கருதப்படுவதாலும்;

இந்தியக் குடியரசின் **அறுபதாம்** ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**அத்தியாயம்—I**

**முன்னுரை**

**1.** (1) இந்தச் சட்டம் 2009—ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றச் சட்டம் என வழங்கப்பெறும். **குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.**

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,— **பொருள் வரையறைகள்.**

(1) ''வேளாண்மை நிலையம்'' என்றால் வேளாண்மையில் அல்லது தோட்டக்கலையில் பட்டம் வழங்குகிற பல்கலைக்கழகம் அல்லது பிற நிலையம் எதுவும் எனப் பொருள்படும்;

(2) "வேளாண்மைத் தொழிலாற்றுநர்" என்றால் வேளாண்மைத் தகுதிப்பாட்டினைப் பெற்றிருக்கிற மற்றும் வேளாண்மைத் திட்டத்தை நிறைவேற்றுகிற நபர்கள் எனப் பொருள்படும்;

(3) "வேளாண்மைத் திட்டம்" என்றால் நன்கு வரையறுக்கப்பட்ட இலக்குகளுடன் கூடிய வேளாண்மை அல்லது தோட்டக்கலை தொடர்பான திட்டவட்டமான பணி சார்ந்த அமைப்புத் திட்டம் மற்றும் காலவரையறையுடனும் நிதி தொடர்பான தாக்கங்களை உள்ளடக்கிய செயல்முறை சார்ந்த அமைப்புத் திட்டம் எனப் பொருள்படும்;

(4) "வேளாண்மைத் தகுதிப்பாடு" என்றால் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நிலையங்களால் வழங்கப்படுகிற, அதில் குறித்துரைக்கப்பட்ட தகுதிப்பாடுகள் எவையும் எனவும், 15, 16 ஆகிய பிரிவுகளின்படி அரசினால் விளம்பப்படும் தகுதிப்பாடுகள் எனவும் பொருள்படும்;

(5) "மன்றம்" என்றால் இந்தச் சட்டத்தில் 3ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றம் எனப் பொருள்படும்;

(6) "குழு" என்றால் 12–ஆம் பிரிவின்படி மன்றத்தினால் அமைக்கப்பட்ட செயற்குழு அல்லது பிற குழுக்கள் எனப் பொருள்படும்;

(7) "அரசு" என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(8) "உறுப்பினர்" என்றால் மன்றத்தின் உறுப்பினர் எனப் பொருள்படும்;

(9) "பதிவேடு" என்றால் 21–ஆம் பிரிவின்படி பேணி வரப்படும் தமிழ்நாடு மாநில வேளாண்மைத் தொழிலாற்றுநர்கள் பதிவேடு எனப் பொருள்படும்;

(10) "ஒழுங்குமுறை விதி" என்றால் இந்தச் சட்டத்தின் 43–ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட ஓர் ஒழுங்குமுறை விதி எனப்படும்;

(11) "இணைப்புப் பட்டியல்" என்றால் இந்தச் சட்டத்துடன் இணைக்கப்பட்ட இணைப்புப் பட்டியல் எனப் பொருள்படும்;

(12) "செயலாளர்" என்றால் 11–ஆம் பிரிவின்படி மன்றத்தால் நியமிக்கப்பட்ட நபர் ஒருவர் எனப் பொருள்படும்;

## அத்தியாயம்–II.

## தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றம்.

மன்றத்தின் அமைப்பும், அதில் எவரெவர் அடங்கியுள்ளனர் என்பதும்.

**3.** (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றம் என அழைக்கப்படும் மன்றம் ஒன்றை அமைக்கலாம்.

(2) இந்த மன்றமானது மேற்சொன்ன பெயரில் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு நிலையான தொடர்பாட்டு உரிமையையும் தனித்த ஓர் இலட்சினையையும் பெற்று அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வாங்குவதற்கான, வைத்திருப்பதற்கான மற்றும் அதனை முடிவு செய்வதற்கான மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் மற்றும் மேற்சொன்ன பெயரில் வழக்கிடுதல் வேண்டும் மற்றும் வழக்கிடப்படுதல் வேண்டும்.

(3) மன்றமானது, பின்வரும் உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்;– அதாவது:–

(a) பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர்களால் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படும் இருபது உறுப்பினர்கள்;

(b) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய, வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், வேளாண்மைப் பொறியியல், மனையியல் ஆகிய புலங்கள் ஒவ்வொன்றையும் சார்பாற்றம் செய்வதற்கு ஓர் உறுப்பினர் என்ற வகையில் ஐந்து முதுநிலை புல உறுப்பினர்கள்; (தமிழ்நாடு சட்டம் 8/1971.)

(c) அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும், வேளாண்மையில் தகுதிப்பாடு பெற்றுள்ள, அரசின் வேளாண்மைத் துறையிலிருந்து இரண்டு உறுப்பினர்கள்;

(d) அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும், தோட்டக்கலையில் தகுதிப்பாடு பெற்றுள்ள அரசின் தோட்டக்கலைத் துறையிலிருந்து ஓர் உறுப்பினர்;

(e) அரசினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய வேளாண்மைப் பொறியியலில் தகுதிப்பாடு கொண்டுள்ள அரசின் வேளாண்மைப் பொறியியல் துறையின் ஓர் உறுப்பினர் ;

(f) அரசினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேளாண்மைத் தகுதிப்பாடு கொண்டவருக்கு முன்னுரிமை என்ற அளவில் முன்னணி வேளாண்மைத் தொழில் முனைவர் ஒருவர்;

(4) தலைவரும், துணைத் தலைவரும் மன்றத்தின் உறுப்பினர்களால் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(5) தலைவர் மற்றும் துணைத் தலைவர் உள்ளடங்கலாக மன்றத்தின் உறுப்பினர்களாக பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பெயர்கள் ***தமிழ்நாடு அரசிதழில்,*** அரசினால் அறிவிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(6) நபர் எவரும், அவர் பதிவேட்டில் தம்மை பதிவு செய்திருந்தாலன்றி மன்றத்திற்குப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ தகுதியுடையவராதல் கூடாது.

**தேர்தல் முறை.**

**4.** (1) 3–ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (a) என்னும் கூறின் படியான தேர்தல் ஒன்று வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய விதிகளுக்கு இணங்கிய வகையில் அரசினால் நடத்தப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு செய்யப்பட்ட விதிகள் எவையும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு பதிவேடு தயாரிக்கப்படுவது நிலுவையில் இருக்கும் போது, 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (a) எனும் கூறில் சுட்டப்பட்ட உறுப்பினர்கள் அரசினால் பெயர்குறித்து நியமிக்கப்படலாம்.

(2) மன்றத்தின் தேர்தல் எதனின் தொடர்பாகவும் பூசல் ஏதேனும் எழுமானால் அது அரசுக்கு, அதன் முடிவிற்காகச் சாட்டியனுப்படுதல் வேண்டும்; அம்முடிவானது இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

**தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிக்கால அளவு.**

**5.** (1) தலைவர் அல்லது துணைத்தலைவர் நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாத மற்றும் உறுப்பினர் ஒருவராக தமது கால அளவு முடிவடைவதற்கு அப்பால் நீட்டிக்கப்படாத ஒரு கால அளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் வகை முறைகளுக்கு உட்பட்டு, உறுப்பினர் ஒருவர் மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு ஆண்டுக் கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**வரம்புரை :**

ஆனால் அத்தகைய உறுப்பினர் ஒருவர் மேற்சொன்ன நான்கு ஆண்டுக்கால அளவு முடிவடைந்த போதிலும், அவருக்குப் பின்வருபவர் தேர்ந்தெடுக்கப்படுவது அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவது வரையிலும் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(3) மன்றத்தின் உறுப்பினர், மறுமுறை பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கோ அல்லது மறுமுறை தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ உரிமைத் தகுதி உடையவராதல் வேண்டும்.

(4) மன்றத்தின் உறுப்பினர் எவரையும் பொறுத்த அளவில் நான்கு ஆண்டுக் கால அளவானது முடிவடைய இருக்குமிடத்து அத்தகைய கால அளவானது முடிவடைவதற்கு முன்பாக ஒரு மாதத்திற்குள்ளாக எந்த நேரத்திலும் அவருக்குப்பின் வருபவர் பெயர்குறித்து நியமிக்கப்படலாம் அல்லது தேர்ந்தெடுக்கப்படலாம்; ஆனால் மேற்சொன்ன கால அளவு முடிவடைவது வரையிலும் அவர் பதவி ஏற்றல் கூடாது.

**உறுப்பினர் பதவி அற்றுப் போதல்.**

**6.** (1) தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்,–

(a) மன்றத்தின் கருத்தில் போதிய காரண விளக்கம் இன்றி மன்றத்தின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வராதிருப்பாரானால் ;

(b) தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரின் நேர்வில் அவர் பதிவேட்டில் பதிவு செய்துள்ள நபர் ஒருவராக இருப்பது அற்றுப் போயிருக்குமானால்;

(c) ஒழுக்கக் கேட்டை உள்ளடக்கிய மற்றும் சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கத்தக்க குற்றச் செயல் ஒன்றிற்காக குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு இருப்பாரானல் ;

(d) அவர் விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையர் ஒருவராக இருப்பாரானால்;

(e) அவர் மனச்சீர்கேடுற்றவராகி அவ்வாறு தகுதி வாய்ந்த நீதி மன்றத்தினால் விளம்பப்பட்டு இருப்பாரானால்;

அவர் தம் பதவியை விட்டு நீங்கியுள்ளவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட காலியிடம் ஒன்று ஏற்படுவதன் பேரில் செயலாளர், அரசுக்கு அத்தகைய காலியிடம் ஏற்பட்டிருப்பதை உடனடியாக அறிவித்தல் வேண்டும்; மற்றும் அரசானது, 7—ஆம் பிரிவிற்கான வரம்புரைக்குட்பட்டு அத்தகைய காலியிடத்தை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

தற்செயல் காலியிடம்.

**7.** மன்றத்தில் ஏற்படும் ஒரு காலியிடமானது பெயர்குறித்து நியமிக்கப்படுதல் அல்லது நேர்விற்கேற்ப தேர்தல் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த காலியிடத்தை நிரப்புவதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நபரானவர் எவருடைய பதவியிடத்தை எடுத்துக் கொள்கிறாரோ அவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கால அளவின் எஞ்சிய பகுதிக்கால அளவுக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும் :

**வரம்புரை:**

ஆனால், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினரின் பதவிக்கால அளவு முடிவடையும் தேதிக்கு ஆறு மாதங்களுக்குள் ஏற்படுகிற காலியிடம் எதுவும் இந்தப் பிரிவின்படி நிரப்பப்படத் தேவையில்லை.

பதவி விலகல்.

8. (1) மன்றத்தின் தலைவர் அல்லது துணைத்தலைவர், மன்றத்திற்கு முகவரி இடப்பட்டு செயலாளரிடம் கொடுக்கப்படும் எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாகத் தமது பதவியை எந்த நேரத்திலும் விட்டு விலகலாம் ; மற்றும் அப்பதவி விலகலானது மன்றத்தினால் அது ஏற்கப்படுகிற தேதி அல்லது செயலாளரால் அப்பதவி விலகலானது பெறப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாள்கள் முடிவடைவது ஆகிய இவற்றுள் எது முந்தையதோ அது முதற்கொண்டு செயல் விளைவு கொள்ளுதல் வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவர் தலைவருக்கு முகவரி இடப்பட்ட, எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாகத் தம் பதவியை எந்த நேரத்திலும் விட்டு விலகலாம்; மற்றும் அத்தகைய பதவி விலகல் ஒவ்வொன்றும் தலைவரால் அது ஏற்கப்படுகிற தேதி அல்லது தலைவரால் அப்பதவி விலகலானது பெறப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாள்கள் முடிவடைவது, ஆகிய இவற்றுள் எது முந்தையதோ அது முதற்கொண்டு செயல் விளைவு கொள்ளுதல் வேண்டும்.

கூட்டங்கள்.

**9.** (1) மன்றமானது, மன்றத்தினால் குறிக்கப்படக் கூடிய அத்தகைய நேரத்திலும், இடத்திலும் ஓர் ஆண்டில் ஒவ்வொரு கால் ஆண்டிலும் கூடுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் கூட்டமொன்றில் அலுவல் நடவடிக்கைக்குத் தேவையான கோரெண் ஒன்பதாக இருத்தல் வேண்டும்.

(3) தலைவர் வந்திருக்கிறபோது அவர் மன்றத்தின் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும் அவர் வராத போது துணைத் தலைவரும், இருவரும் வராத போது வந்திருக்கிற உறுப்பினர்களால் அவர்களுக்கிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிற உறுப்பினர் எவரும் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, மன்றத்தின் கூட்டம் எதனின்முன்பும் வரக்கூடிய பிரச்சினைகள் அனைத்தும் வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஒன்றினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) ஒட்டுகள் சமமாக இருக்கிற நேர்வில் மன்றத்தின் தலைவர் அல்லது கூட்டத்திற்குத் தலைமை வகிக்கிற உறுப்பினர் அறுதிவாக்கு ஒன்றினைப் பெறுதல் வேண்டும்.

(6) (1) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளின் வகை முறைகளுக்குட்பட்டு, மன்றமானது, ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்படக்கூடியவாறு அதன் கூட்டங்களில், அலுவல் நடவடிக்கைத் தொடர்பான அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

மன்றத்தில் உள்ள காலியிடங்கள், செயல்கள் முதலான வற்றை செல்லத் தகாதனவாக ஆக்குதல் கூடாது எனல்.

**10.** மன்றத்தின் செயல்பாடு அல்லது நடவடிக்கை எதுவும், மன்றத்தில் ஒரு காலியிடம் இருக்கிறது என்ற காரணத்தினாலோ அல்லது அதன் அமைப்பில் குறைபாடு அல்லது ஒழுங்கின்மை எதுவும் இருக்கிறது என்ற காரணத்தினாலோ செல்லத்தகாததாக ஆதல் கூடாது.

செயலாளர், பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர் களின் நியமனம்.

**11.** (1) மன்றமானது, அரசின் முன் ஒப்பளிப்புடன் வேளாண்மையில் தகுதிப்பாடு பெற்றுள்ள நபர் ஒருவரை மன்றத்தின் செயலாளராக நியமிக்கலாம்; அவர், மன்றமானது பிற நபர் எவரையும் பொருளாளராக நியமிக்கிறது என்றாலன்றி பொருளாளராகவும் செயற்படுதல் வேண்டும் மன்றமானது இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானதென அது கருதக் கூடிய அத்தகைய பிற அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிக்கலாம்.

(2) மன்றத்தினால் நியமிக்கப்பட்ட செயலாளர், பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பணி பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும் ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

மையச் சட்டம் XLV/1860.

(3) மன்றத்தின் செயலாளர், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் பொருளில் பொது ஊழியர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) மன்றத்தின் ஆணைகள் மற்றும் முடிவுகள் மற்றும் பிற முறையாவணங்கள் அனைத்தும் செயலாளரின் அல்லது இது குறித்து மன்றத்தினால் உரிய முறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட அதன் பிற அலுவலர் எவரின் கையொப்பத்தின் மூலம் அதிகாரச் சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

செயற்குழு மற்றும் பிற குழுக்கள்.

**12.** (1) மன்றமானது, அதன் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து செயற்குழு ஒன்றினை அமைத்துருவாக்குதல் வேண்டும்; மற்றும் அது மன்றமானது தேவையானது எனக் கருதுகிற அத்தகைய பொது அல்லது திட்டவட்டமான நோக்கங்களுக்காக அத்தகைய பிற குழுக்களை அமைத்துருவாக்கலாம்; மற்றும் செயற்குழு நீங்கலான பிற குழு எதற்கும், பொருட்பாடு எதனின் பேரிலும், ஆலோசனை வழங்குவதற்குத் திட்டவட்டமான தகுதிப்பாடு பெற்றிருக்கிற நபர் அல்லது நபர்கள் எவரையும் இசைந்து தெரிவு செய்யலாம். செயற்குழுவின் அமைப்பும் பணிகளும் ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு குழுவானது ஒழுங்கு முறை விதியில் வகை செய்யப்படக்கூடியவாறு அத்தகைய நேரத்திலும், அத்தகைய இடத்திலும் கூடுதல் வேண்டும்; மற்றும் அதன் கூட்டங்களின் அலுவல் நடவடிக்கை குறித்த அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

கட்டணங்கள் மற்றும் படிகள்.

**13.** மன்றத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களுக்கும் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களுக்கும்கூட ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்படக் கூடியவாறு மன்றத்தில் அல்லது நேர்விற்கேற்ப குழுக்களின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அத்தகைய கட்டணங்களும் படிகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

**வேளாண்மைத் தகுதிப் பாடுகளுக்கு ஏற்பளிப்பு வழங்குதல்.**

**14.** (1) இணைப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள வேளாண்மை நிலையங்களால் வழங்கப்படும் வேளாண்மை தகுதிப்பாடுகள், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, வேளாண்மைத் தகுதிப்பாடுகளாக ஏற்பளிக்கப்படுதல் வேண்டும்.

(2) இணைப்புப்பட்டியலில் சேர்க்கப்படாத, வேளாண்மை தகுதிப்பாடு ஒன்றினை வழங்குகிற தமிழ்நாடு மாநிலத்திலுள்ள வேளாண்மை நிலையம் எதுவும் அத்தகைய தகுதிப்பாட்டிற்கு ஏற்பளிப்பினை பெறுவதற்காக அரசுக்கு விண்ணப்பிக்கலாம்; மற்றும் அரசானது மன்றத்தை ஆலோசித்த பின்பு, அறிவிக்கையின் வாயிலாக, இணைப்புப்பட்டியலில் அத்தகைய நிலையத்தையும் குறித்துரைக்கப்பட்டதொரு தேதிக்கு பின்பு வழங்கப்படும் போது அத்தகைய தகுதிப்பாட்டையும் சேர்ப்பதற்காக அந்த இணைப்புப் பட்டியலைத் திருத்தலாம்.

**பரிமாற்றத் திட்டம் இருக்கிறபோது வேளாண்மைத் தகுதிப்பாடு களுக்கு ஏற்பளிப்பு வழங்குதல்.**

**15.** (1) தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே அல்லது இந்தியாவிற்கு வெளியே அமைந்து பரிமாற்றத் திட்டம் ஒன்றுடன் இணைந்து செயற்படும் வேளாண்மை நிலையங்களால் வழங்கப்படும் வேளாண்மைத் தகுதிப்பாடுகள், இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏற்பளிக்கப்பட்ட தகுதிப்பாடுகளாக இருத்தல் வேண்டும்.

(2) மன்றமானது 21–ஆம் பிரிவில் சுட்டப்பட்டவாறான பதிவேட்டினைப் போன்ற பதிவேடு ஒன்றினை தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே உள்ள மாநிலம் அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடு எதனின் சட்டப்படியும் பேணிவரும் பொறுப்பானது ஒப்படைக்கப்பட்டுள்ள, அத்தகைய மாநிலம் எதனின் அல்லது நாடு எதனின் அதிகார அமைப்புடனும் வேளாண்மை தகுதிப்பாடுகளுக்கு ஏற்பளிப்பு வழங்குவதற்காக பரிமாற்றத் திட்டம் ஒன்றை அமைப்பதற்காக பேர உடன்பாட்டினைச் செய்து கொள்ளலாம்; மற்றும் அத்தகைய பேர உடன்பாடு எதனையும் தொடர்ந்து, மன்றத்தின் பரிந்துரையின் பேரில் அரசானது அறிவிக்கையின் வாயிலாக அது குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றுக்குப் பின்னர் வழங்கப்படுகிற போது மட்டுமே ஏற்பளிக்கப்படுதல் வேண்டும் என விளம்பலாம்.

(3) (2)–ம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அதிகார அமைப்பு எதனாலும் ஏற்பளிப்புக்காக முன் வைக்கப்பட்டிருக்கிற வேளாண்மைத் தகுதிப்பாடு எதனையும் பரிந்துரைக்க மறுக்குமிடத்து மற்றும் அத்தகைய அதிகார அமைப்பானது அரசுக்கு விண்ணப்பிக்குமிடத்து, அரசானது, அத்தகைய விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்த பின்னரும், அத்தகைய மறுப்புரை எதற்காகவுமான காரணங்கள் எவையேனும் இருப்பின் அவை குறித்த அறிக்கை ஒன்றை மன்றத்திடமிருந்து பெற்றதற்குப் பின்னரும், அரசானது அறிவிக்கையின் வாயிலாக அது குறித்துரைக்கப்பட்டதொரு தேதிக்குப் பின்னர் வழங்கப்படுகிற போது மட்டுமே ஏற்பளிக்கப்படுதல் வேண்டும் என விளம்பலாம்.

**பரிமாற்றத் திட்டம் எதுவும் இல்லாத போது வேளாண்மைத் தகுதிப்பாட்டிற்கு ஏற்பளிப்பு வழங்குதல்.**

**16.** (1) அரசானது மன்றத்துடன் ஆலோசனை செய்த பின்னர் அறிவிக்கையின் வாயிலாக, வேளாண்மைத் தகுதிப்பாடுகளுக்கு ஏற்பளிப்பதற்கான பரிமாற்றத் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லாத, தமிழ்நாடு மாநிலத்துக்கு வெளியே உள்ள மாநிலம் எதிலும் அல்லது இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடு எதிலும் இருக்கிற வேளாண்மை நிலையத்தால் வழங்கப்படும் வேளாண்மைத் தகுதிப்பாடுகள் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, வேளாண்மைத் தகுதிப்பாடுகள் என ஏற்பளிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் குறித்துரைக்கப்பட்டதொரு தேதிக்குப் பின்னர் அல்லது குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் என்பதாக வழங்கப்படும் போது மட்டுமே அவ்வாறு இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தகுதிப்பாடுகளை பெற்றிருக்க நபர்களால் செய்யப்படும் வேளாண்மைத் தொழில்—

(a) அந்த மாநிலத்தில் அல்லது நாட்டில் அத்தகைய நபர்களை பதிவு செய்வதை முறைப்படுத்துகிற அப்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு இணங்கிய வகையில் வேளாண்மை தொழிலாற்றுநராக அத்தகைய நபர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(b) பயிற்றுவிக்கும் மற்றும் ஆராய்ச்சிப்பணி என்பதான நோக்கத்திற்காக அப்போதைக்கு அவர்கள் இணைந்துள்ள நிலையங்களின் வரம்புகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(c) பொது அல்லது தனி ஆணையின் வாயிலாக அரசினால் இது குறித்து குறித்துரைக்கப்படும் கால அளவு வரம்புக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

**படிப்புப் பிரிவுகள் மற்றும் தேர்வுகள் குறித்து தகவல் கோரிப் பெறுவதற்கான அதிகாரம்.**

**17.** ஏற்பளிக்கப்பட்ட வேளாண்மைத் தகுதிப்பாடு ஒன்றினை வழங்குகிற வேளாண்மை நிலையம் ஒவ்வொன்றும், அத்தகைய தகுதிப்பாட்டினைப் பெறும் பொருட்டு ஏற்க வேண்டிய படிப்புப் பிரிவுகள் மற்றும் தேர்வுகள் குறித்தும், அத்தகைய படிப்புப் பிரிவுகள் மற்றும் தேர்வுகள் எந்த வயதுகளில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய தகுதிப்பாடானது வழங்கப்படுகிறது என்பது குறித்தும் மற்றும் பொதுவாக அத்தகைய தகுதிப்பாட்டினைப் பெறுவதற்கான தேவைப்பாடுகள் குறித்தும் மன்றத்திற்கு அவ்வப்போது தேவைப்படக்கூடிய அத்தகைய தகவலைக் கொடுத்தல் வேண்டும்.

**வேளாண்மை நிலையங்களையும் தேர்வுகளையும் ஆய்வு செய்தல்.**

**18.** (1) மன்றமானது அதனால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் ஏதேனும் இருப்பின் அவற்றுக்கு உட்பட்டு வேளாண்மை நிலையம் எதனாலும் வழங்கப்படும் வேளாண்மைத் தகுதிப்பாட்டிற்கு ஏற்பளிப்பு வழங்குவதற்காக அரசுக்கு பரிந்துரை செய்யும் நோக்கத்திற்காக வேளாண்மைக் கல்வி வழங்கப்படுகிற அத்தகைய வேளாண்மை நிலையம் எதனையும் ஆய்வு செய்வதற்கு அல்லது அத்தகைய வேளாண்மை நிலையம் எதனாலும் நடத்தப்படும் தேர்வு எதனையும் கண்காணித்துக் கவனிப்பதற்குத் தேவைப்படுகிறதென கருதக் கூடிய அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர்கள் பயிற்சி அல்லது தேர்வு எதுவும் நடைபெறுவதற்கு இடையூறு செய்தல் கூடாது, ஆனால் பணியாளர் தொகுதி, கருவிகள், இடவசதி, பயிற்சி மற்றும் வேளாண்மைக் கல்வி வழங்குவதற்காக ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்பட்டுள்ள பிற வசதிகளில் தர நிலைகளின் போதுமான தன்மை குறித்தும் அவர்கள் கண்காணித்துக் கவனித்த தேர்வு ஒவ்வொன்றின் நிறைவான தன்மை குறித்தும் மன்றத்திற்கு அறிக்கை அளித்தல் வேண்டும்.

(3) மன்றமானது தொடர்புள்ள வேளாண்மை நிலையத்திற்கு அத்தகைய அறிக்கை எதனின் நகலொன்றை மேற்குறித்து அனுப்புதல் வேண்டும்; மற்றும் அதன் பேரில் அத்தகைய நிறுவனத்தில் குறிப்புரைகள் எவையேனுமிருப்பின் அவற்றுடன் நகலொன்றை அரசுக்கும் மேற்குறித்து அனுப்புதல் வேண்டும்.

**ஏற்பளிப்பினை திரும்பப் பெறுதல்.**

**19.** (1) அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் பேரில் மன்றத்திற்கு,—

(a) வேளாண்மைத் தகுதிப்பாட்டினை பெறும் பொருட்டு மேற்கொள்ளப்படும் படிப்புப் பிரிவுகள் மற்றும் தேர்வுகள் அல்லது வேளாண்மை நிலையம் எதனாலும் நடத்தப்படும் தேர்வு எதிலும் தேர்வு நாடுநர்களிடமிருந்து கோரப்படும் புலமை, இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிக்கு இணங்கிய வகையில் இல்லை என்றோ அல்லது அதில் கோரப்படும் தர நிலைக்கு குறைவானதாக இருக்கிறது என்றோ

(b) அத்தகைய வேளாண் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள பணியாளர் தொகுதி, கருவி, இடவசதி, பயிற்சி, பயிற்றுவிப்பதற்கான மற்றும் பயிற்சிக்கான பிற வசதிகள் ஆகியன ஒழுங்கு முறை விதியில் வகை செய்யப்படக் கூடியவாறான தர நிலைகளுக்கு இணங்கிய வகையில் இல்லை என்றோ தோன்றுகிறபோது,

மன்றமானது அரசுக்கு இது குறித்த விளக்க உரை ஒன்றை அனுப்புதல் வேண்டும்.

(2) அத்தகைய விளக்க உரை ஒன்றை பரிசீலனை செய்ததற்குப் பின்னர், அரசானது, அந்த விளக்கவுரையை, அந்த வேளாண்மை நிலையத்துக்கு, அது செய்யத் தெரிவு செய்யும் அத்தகைய குறிப்புரைகளுடன் அரசுக்கு எந்த கால அளவுக்குள் அந்த நிலையமானது தனது விளக்கத்தை பணிந்தனுப்பலாம் என்பதனைத் தெரியப்படுத்துகிற குறிப்பு ஒன்றையும் சேர்த்து, மேற்குறித்து அனுப்புதல் வேண்டும்.

(3) அரசானது அந்த விளக்கத்தை பெற்றதன் பேரிலும் அது தக்கதென கருதுகிறவான அத்தகைய விசாரணை ஏதேனுமிருப்பின் அதனைச் செய்ததற்குப் பின்னரும், அறிவிக்கையின் வாயிலாக, உரிய இணைப்புப் பட்டியலில், குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றுக்கு முன்னதாகவோ அல்லது குறித்துரைக்கப்பட்ட தேதி ஒன்றுக்கு பின்னரோ என்பதாக வழங்கப்படுகிறபோது மட்டுமே அது ஏற்பளிக்கப்பட்ட வேளாண்மை தகுதிப்பாடாக இருத்தல் வேண்டும் என விளம்புகிறவாறான பதிவு ஒன்று, அத்தகைய வேளாண்மை நிலையத்தினால் வழங்கப்படும் மேற்சொன்ன வேளாண்மைத் தகுதிப்பாட்டிற்கு எதிரில் செய்யப்படுதல் வேண்டும் என பணிக்கலாம்.

**வரம்புரை:**

ஆனால் அத்தகைய அறிவிப்பினைப் பிறப்பிப்பதற்கு முன்னதாக, அரசானது இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றத்துடன் கலந்தாலோசனை செய்யலாம்.

**வேளாண்மை கல்விக்கான குறைந்த அளவு தர நிலைகள்**

**20.** (1) மன்றமானது ஒழுங்கு முறை விதியின் மூலமாக வேளாண்மை நிலையங்களால் வேளாண்மை தகுதிப்பாடுகள் வழங்கப்படுவதற்கு தேவைப்படும் குறைந்த அளவு கல்வித் தர நிலைகளை குறித்துரைக்கலாம்.

(2) இந்த நோக்கத்திற்காக 12–ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட குழு ஒன்று ஏதேனும் இருக்குமானால், அது அவ்வப்போது அந்த ஒழுங்குமுறை விதியின் செயற்படும் திறன் குறித்து மன்றத்திற்கு அவ்வப்போது அறிக்கை கொடுத்தல் வேண்டும்; மற்றும் அது தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய திருத்தங்களை மன்றத்திற்குப் பரிந்துரை செய்யலாம்.

## அத்தியாயம்–III

## தமிழ்நாடு மாநில வேளாண்மைத் தொழிலாற்றுநர்களுக்கான பதிவேடு.

**தமிழ்நாடு மாநில வேளாண்மைத் தொழிலாற்று–நர்களுக்கான பதிவேடு.**

**21.** (1) இம்மன்றமானது ''தமிழ்நாடு மாநில வேளாண்மைத் தொழிலாற்றுநர்களுக்கான பதிவேடு'' என்ற பெயரில்அறியப்படும் பதிவேடு ஒன்றினை வகுத்துரைக்கப்பட்ட முறையில் பேணி வருவதற்கு ஆவனசெய்தல் வேண்டும்; அது வேளாண்மை தகுதிப்பாட்டினை பெற்றுள்ள மற்றும் எந்த நேரத்திலும் மேற்சொன்ன பதிவேட்டில் தம் பெயரை பதிவு செய்துள்ள நபர்கள் அனைவரின் பெயர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (a) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் பதிவேட்டினை வைத்து வருவது;

(b) இம்மன்றத்தினால் செய்யப்பட்ட ஆணைகள் எவற்றையும் வைத்து வருவது;

(c) பதிவேட்டினை அவ்வப்போது திருத்தி அமைப்பது;

(d) ஒழுங்குமுறையின் விதியில் வகை செய்யப்படக்கூடிய அத்தகைய முறையில் ***தமிழ்நாடு அரசிதழில்*** பதிவேட்டினை வெளியிடுதல்

ஆகியன மன்றச் செயலாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய பதிவேடானது 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் பொருளில் ஒரு பொது ஆவணமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நகல் ஒன்றின் மூலம் மெய்ப்பிக்கப்படலாம். **மையச் சட்டம் 1/1872.**

**முதலாம் பதிவேட்டினைத் தயாரித்தல்.**

**22.** (1) முதலாம் தமிழ்நாடு மாநில வேளாண்மைத் தொழிலாற்றுநர்களுக்கான பதிவேட்டினைத் தயாரிக்கும் நோக்கங்களுக்காக, அரசானது வேளாண்மைத் தகுதிப் பாடுகளை கொண்டிருக்கிற மூன்று நபர்கள் அடங்கிய பதிவுத் தீர்ப்பாயம் ஒன்றை அறிவிக்கையின் மூலம் அமைத்துருவாக்குதல் வேண்டும்; மற்றும் வேளாண்மைத் தகுதிப்பாடுகளைக் கொண்டுள்ள பதிவாளர் ஒருவரையும் கூட நியமித்தல் வேண்டும்; அவர் அத்தீர்ப்பாயத்தின் செயலாளராகச் செயற்படுதல் வேண்டும்.

(2) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும், பதிவு செய்வதற்கான விண்ணப்பமானது பதிவு தீர்ப்பாயத்திற்கு எந்தத் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும் என்பதான ஒரு தேதியையும் கூட குறிக்கலாம். பதிவிற்கான விண்ணப்பமானது வகுத்துரைக்கப்படக் கூடியவாறு ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பதிவுத் தீர்ப்பாயமானது குறிக்கப்பட்ட தேதியன்றும் அதற்கு முன்னரும் பெறப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் கூர்ந்தாய்வு செய்தல் வேண்டும்; மற்றும் அது, அந்த விண்ணப்பதாரர் பதிவு செய்வதற்குத் தகுதி உடையவரென நிறைவு கொள்ளுமானால் அந்தப் பதிவேட்டில் அந்த விண்ணப்பதாரரின் பெயரைப் பதிவு செய்யுமாறு பணித்தல் வேண்டும்.

(4) அவ்வாறு தயாரிக்கப்பட்ட பதிவேடானது அதன்பின்பு வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் வெளியிடப்படுதல் வேண்டும். அவ்வாறு வெளியிடப்பட்ட பதிவேட்டிலுள்ள பதிவு எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் எவரும் அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாள்களுக்குள்ளாக, இது குறித்து அரசினால் அறிவிக்கையின்வாயிலாக நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பு ஒன்றிடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

(5) பதிவாளர், (4) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பின் முடிவிற்கு இணங்கிய வகையில் அப்பதிவேட்டினைத் திருத்துதல் வேண்டும்; மற்றும் அதன் பின்பு அந்தப் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நபருக்கும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(6) மன்றமானது அமைக்கப்பட்டதின் பேரில் பதிவேடானது அதன் பாதுகாவலில் வைக்கப்படுவதற்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்; மற்றும் முதலாம் பதிவேட்டில் பதிவு செய்வதற்காக வசூலிக்கப்பட்ட விண்ணப்ப கட்டணங்கள் அனைத்தும், மன்றத்தில் வரவு வைக்கப்படுவதற்காகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**பதிவேட்டில் பதிவு செய்தலும் சான்றிதழை வழங்குதலும்**

**23.** (1) மன்றமானது அமைக்கப்பட்டதற்கு பின்னர், மன்றத்தின் செயலாளரானவர், நபர் எவராலும், வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய படிவத்திலும் மற்றும் அத்தகைய முறையிலும் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரில், தொடர்பான அத்தகைய நபர் வேளாண்மைத் தகுதிபாடுகளைக் கொண்டிருக்கிறார் என நிறைவுறுவாரானால், அவர் தம் பெயரை பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

(2) பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய படிவத்திலும் மற்றும் அத்தகைய முறையாலும் மற்றும் ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டடணத்தைச் செலுத்துவதன் பேரிலும், இது குறித்து செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரில் பதிவு சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு உரிமைத் தகுதி உடையவராதல் வேண்டும்; மற்றும் மன்றமானது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் பதிவுச் சான்றிதழ் ஒன்றினை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்;

**வரம்புரை:**

ஆனால் பதிவேட்டிலிருந்து அவர் தம் பெயரானது நீக்கப்படுவதன் பேரில், அத்தகைய சான்றிதழின் செல்லும் தன்மையானது அற்றுப் போதல் வேண்டும்.

(3) தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே இருந்து வேளாண்மைத் தகுதிப் பாட்டினை பெற்று இருக்கிற மற்றும் தமிழ்நாடு மாநிலத்திற்கு இடம் பெயர்ந்துள்ள நபர் எவரும் கூட, அவர் தமிழ்நாடு மாநிலத்திற்குள் தாம் வந்த தொண்ணூறு நாள்கள் என்னும் கால அளவிற்குள்ளாக மன்றத்தில் பதிவு செய்துக் கொள்ளுதல் வேண்டும்.

(4) ஒரு பதிவு சான்றிதழானது தொலைந்து விட்டிருக்கிறது அல்லது அழிக்கப் பட்டிருக்கிறது என்பதாகச் செயலாளர் நிறைவு கொள்ளும் வகையில் விளக்கிக் காண்பிக்கப்படுமிடத்து, செயலாளரானவர், வகுத்துரைக்கப்படக்கூடியவாறு ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் சான்றிதழின் இரண்டாம் படியொன்றினை வழங்கலாம்.

**கூடுதல் தகுதிப்–பாடுகளை பதிவு செய்தல்.**

**24.** பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர் எவரும், அவர் தாம் வேளாண்மைத் தகுதிப்பாட்டிற்கும் கூடுதலாக முதுநிலைப் பட்டம் அல்லது பட்டயம் எதனையும் பெறுவாரானால் ஒழுங்குமுறை விதியில் வகை செய்யபடக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் மற்றும் ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய

கட்டணத்தைச் செலுத்துவதன் பேரிலும், இது குறித்து செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரில், பதிவேட்டில் அவர் தம் பெயருக்கு எதிரில் ஏற்கெனவே செய்யப்பட்ட பதிவு எதற்கும் கூடுதலாக, அத்தகைய பட்டம் அல்லது பட்டயம் இருப்பதைக் குறிப்பிடும் பதிவு ஒன்றினைப் பெறுவதற்கு உரிமைத் தகுதி உடையவராதல் வேண்டும்.

பதிவு செய்தலைப் புதுப்பித்தல்.

**25.** (1) பதிவேட்டில் பெயர் ஒன்றினைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக, ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்படக்கூடியவாறு ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய புதுப்பித்தலுக்கான கட்டணமானது ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் மன்றத்திற்குச் செலுத்தப்படுவதாதல் வேண்டும்; மற்றும் அத்தகைய புதுப்பித்தலுக்கான கட்டணமானது அது எந்த ஆண்டுக்குத் தொடர்பானதோ அந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் முதல் நாளுக்கு முன்னதாகச் செலுத்தப்படுவதற்கு உரியதாதல் வேண்டும்.

(2) புதுப்பித்தலுக்கான கட்டணம் ஒன்று மேற்சொன்ன தேதிக்குள்ளாகச் செலுத்தப்படாதவிடத்து, செயலாளரானவர், ஒழுங்கு முறையின் விதியில் வகைசெய்யப் படக்கூடியவாரான அத்தகைய முறையில் அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்ததற்கு பின்னர், பதிவேட்டிலிருந்து, அவ்வாறு செலுத்தத் தவறியவரின் பெயரை நீக்குதல் வேண்டும்.

**வரம்புரை:**

ஆனால் அவ்வாறு நீக்கப்பட்டவரின் பெயரானது ஒழுங்குமுறை விதியில் வகைசெய்யப்படக்கூடிய அத்தகைய முறையில், அத்தகைய கட்டணத்தை செலுத்துவதன் பேரில் பதிவேட்டில் மீண்டும் சேர்க்கப்படலாம்.

(3) புதுப்பித்தலுக்கான கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், செயலாளரானவர், புதுப்பித்தல் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்; மற்றும் அத்தகைய சான்றிதழானது பதிவு செய்தலை புதுப்பித்ததைக் காட்டும் நிரூபணச் சான்றாக இருத்தல் வேண்டும்.

பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்தல்.

**26.** (1) இந்தப் பிரிவின் வகை முறைகளுக்கு உட்பட்டு, மன்றமானது நபர் எவருக்கும் அவர் தம் தரப்பை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பினை அவருக்குக் கொடுத்தற்கு பின்பும் அது தக்கதெனக்கருதுகிறவாறான மேலுமான விசாரணை ஏதேனும் இருப்பின் அத்தகைய விசாரணைக்கு பின்னரும்,

(a) அவர் தம் பெயரை திரித்துக் காட்டலின் அல்லது முக்கியமான பொருண்மை ஒன்றை மறைத்தலின் காரணமாக ஏற்பட்ட தவறினால் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதென, அல்லது

(b) அவர் ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய மற்றும் சிறைத்தண்டனையுடன் தண்டிக்கத்தக்க குற்றசெயல் ஒன்றிற்காக குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்றோ அல்லது மன்றத்தின் கருத்தில் மேற்சொன்ன பதிவேட்டில் பெயரை வைத்திருப்பதற்குத் தகுதியற்றவராகச் செய்கிற வகையில் பழிக்கப்படும் நடத்தை அல்லது ஒழுங்குமுறை நடத்தை அல்லது ஒழுக்கவியல் விதி தொகுப்பு எதனையும் மீறிய குற்றத்தைச் செய்துள்ளவரென

அது நிறைவு கொள்ளுமிடத்து, பதிவேட்டிலிருந்து நபர் எவரின் பெயரும் நீக்கப்படுதல் வேண்டும் என ஆணையிடலாம்.

(2) (1)ஆம் உட்பிரிவின் படியான ஆணை ஒன்று பதிவேட்டிலிருந்து எந்த நபருடைய பெயரானது நீக்கப்பட வேண்டுமென ஆணையிடப்படுகிறதோ, அந்த நபர் எவரும் நிரந்தரமாகவோ அல்லது அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்கோ இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்வதற்கு தகுதியற்றவராதல் வேண்டும்.

(3) (1)ஆம் உட்பிரிவின்படியான ஆணை ஒன்று அதன் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைவது வரையிலுமோ அல்லது அந்த ஆணையின் மீதான மேல் முறையீடு ஏதேனும் ஒன்று இருப்பின் அது இறுதியாக தீர்வு செய்யப்படுவது வரையிலுமோ, ஆகிய இவற்றில் எது பிந்தையதோ அது வரையிலும், செயல் விளைவுக் கொள்ளுதல் கூடாது.

(4) (1) ஆம் உட்பிரிவின் படியான ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்டநபர் எவரும், அத்தகைய ஆணையானது அவருக்குத் தெரிவிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக, அரசுக்கு மேல் முறையீடு செய்யலாம் மற்றும் அரசின் முடிவானது இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

(5) இறுதியானதாகிவுள்ள (1) ஆம் உட்பிரிவின் படியான ஆணை ஒன்றின் மூலம் பெயர் நீக்கம் செய்யப்பட்ட நபர் ஒருவர், ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்படக்கூடியவாறான அத்தகைய கால அளவிற்குள்ளாக அவர் தம் பதிவு சான்றிதழையும் புதுப்பித்தலுக்கான சான்றிதழ் ஏதேனும் இருப்பின் அதனையும் செயலாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்; மற்றும் அவ்வாறு நீக்கப்பட்ட பெயரானது ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

**பதிவேட்டில் பதிவு செய்துள்ள நபர் இருப்பிடத்தில் அல்லது தொழில் செய்யுமிடத்தில் ஏற்படும் மாற்றத்தினைத் தெரிவித்தல் வேண்டும் எனல்.**

27. பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள நபர் ஒவ்வொருவரும் அவர் தம் இருப்பிடம் அல்லது தொழில் செய்யுமிடத்தில் மாற்றம் எதுவும் இருப்பின் அதனை அத்தகைய மாற்றம் ஏற்பட்ட தொண்ணுாறு நாள்களுக்குள்ளாக மன்றத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறினால் மன்றத்தின் உறுப்பினர்களின் தேர்தலில் பங்குபெறும் அவர் தம் உரிமையானது மன்றத்தின் ஆணையின் மூலமாக நிரந்தரமாகவோ அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவிற்கோ பறிமுதல் செய்யப்பட்டதாதல் வேண்டும்.

## அத்தியாயம்-IV

### பதிவுப் பெற்ற வேளாண்மை தொழிலாற்றுநர்களின் சிறப்புரிமைகள்

**பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப் பட்டுள்ள நபரின் சிறப்புரிமைகள்**

**28.** இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் ஒவ்வொருவரும் அவர் தம் தகுதிப்பாடுகளுக்கிணங்கிய வகையில் வேளாண்மைத் தொழிலாற்றுநர் ஒருவராக தொழிலாற்றுவதற்கும் அவர் உரிமைத் தகுதியுடையதாக இருக்கிற அத்தகைய செலவுகள், செலவுக் கட்டணங்கள், கட்டணங்கள் எவற்றையும் அத்தகைய தொழிலாற்றுவதை பொறுத்த அளவில் சட்டத்தின் உரியப் போக்கில் வசூலிப்பதற்கும் உரிமை தகுதியுடையவராதல் வேண்டும்.

**பதிவேட்டில் பெயர் பதிவு செய்யப் பட்டுள்ள நபரின் உரிமை.**

**29.** பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் ஒருவர் நீங்கலாக வேறு நபர் எவரும் தமிழ்நாடு மாநிலத்திற்குள்ளாக வேளாண்மை ஆலோசகராக தொழில் செய்வதோ அல்லது வேளாண்மைப் பணிகளை ஆற்றுவதோ கூடாது.

**விளக்கம்:—** ''வேளாண்மைப் பணி'' என்றால்,—

(a) பயிர் வளர்ப்பு, அறுவடைக்கு முன்னதான தொழில் நுட்பம், விதைத் தொழில் நுட்பம், மண்பரிசோதனை, நீர் பரிசோதனை, உரம், செடி வளர்ச்சியை முறைப்படுத்திகள், களைக்கொல்லிகள், பயிர்களைக் காக்கும் பொருள்கள், ஆகியவற்றைப் பொறுத்த வரையிலான பரிந்துரைக்குறிப்பு வழங்குதல், அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம், விதை உற்பத்தித் தொழில் நுட்பம், வேளாண்மை உயிரியல் தொழில் நுட்பம் ஆகியவற்றில் வேளாண்மைப் பணிகளைச் செய்தல்;

(b) தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான வேளாண்மைத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் வேளாண்மைத் திட்டங்களில் கையொப்பமிடுவது, அல்லது அதிகாரச் சான்றளித்தல் மற்றும் உரிய முறையில் தகுதி பெற்ற வேளாண்மை தொழிலாற்றுநர் ஒருவரால் சட்டத்தின் படி கையொப்பமிடப்பட வேண்டியதான அல்லது அதிகாரச் சான்றளிக்கப்பட வேண்டியதான மதிப்பீட்டுச் சான்றிதழை வழங்குதல்;

(c) மண் மற்றும் நீரின் பண்புகளையும், இயற்கை மற்றும் இராசாயன உரங்களின் அளவையும் கணிப்பதிலும், பயிர்களுக்கு அழிவு செய்யும் பூச்சிகளையும் நோய்களையும் இனங்கண்டு தீர்வழி நடவடிக்கைகளை வகுத்துரைப்பதிலும் பல்வேறு மண் தரநிலைகளுக்கும், வேளாண் தட்பவெப்ப கூறுகளுக்கும் ஏற்றவகையில், பயிரிடுதல் தொடர்பான திட்டங்களை நிறைவேற்றுவதை முறைப்படுத்தி உதவி செய்வதிலும், சிறு தோட்டம் அமைத்தல், மலர்செடி வளர்த்தல் மற்றும் நெடுநாள் இருக்கிற தோப்புகளை மேம்பாடு செய்தல் ஆகியவற்றில் உயரிய தொழில் நுட்ப பண்ணை முறைகளை மேற்கொள்வதிலும் குடியானவர்களுக்கு உதவுவதற்கு வேளாண்மைப் பணிமனைகளையும் ஆய்வுக் கூடங்களையும் நடத்துதல்;

என பொருள்படும்.

## அத்தியாயம்–V

## ஒழுங்கு முறை

தொழில்முறை நடத்தை.

**30.** (1) மன்றமானது ஒழுங்குமுறை விதியின் வாயிலாக வேளாண்மை தொழிலாற்றுநர்களுக்கான தொழில் முறை நடத்தையின் மற்றும் ஒழுங்குமுறை நடத்தைலாக தரங்களையும் மற்றும் ஒழுக்கவியல் விதித் தொகுப்பு ஒன்றையும் குறித்துரைக்கலாம்.

(2) (1)ஆம் உட்பிரிவின்படி மன்றத்தினால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதியானது எந்த மீறுகைகள் தொழில்முறை எதனையும் பொறுத்தவரையில் பழிக்கப்படும் நடத்தைலாக அதாவது தொழில் முறை நடத்தைக் கேடாக அமையும் என்பதைக் குறித்துரைக்கலாம்; மற்றும் அத்தகைய வகைமுறைகள் அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிறசட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும் செயல் விளைவுக்கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம்–VI

## தண்டனைகள்

பதிவு செய்து உள்ளதாக பொய்யாக உரிமை கோருவதற்குப் பணத் தண்டனை.

**31.** அப்போதைக்கு பதிவேட்டில் தமது பெயர் பதிவுச் செய்யப்படாத நபர் எவரும், அவ்வாறு அது பதிவு செய்யப்பட்டுள்ளது என பொய்யாகக்குறித்துக் காட்டுவாரானால் அல்லது அந்தப் பதிவேட்டில் அவ்வாறு அவருடைய பெயரானது பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதாக நியாயமான முறையில் உய்த்துணரும்படி கணக்கிட்டுத் திட்டம் செய்யப்பட்ட வாறான சொற்கள் அல்லது எழுத்துக்கள் எவற்றையும் தமது பெயர் அல்லது பட்டபெயர் தொடர்பாகப் பயன்படுத்துவாரானால், முதல் முறையாக குற்றவாளி என தீர்ப்பளிக்கப் பட்டதின் பேரில் அவர் ஐந்தாயிரம் ரூபாய் வரை போகக்கூடிய பணத்தண்டனை விதித்து, மற்றும் அடுத்து குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுவது எதனின் பேரிலும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத பணத்தண்டனை அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கதாதல் வேண்டும்.

பட்டப்பெயரைத் தவறாகப் பயன்படுத்துதல்.

**32.** (1) நபர் எவரும்,–

(a) பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட நபர் ஒருவராக இல்லாமல், வேளாண்மைத் தொழிலாற்றுநர் என்பதான விவரிப்பினைச் செய்வாரானால் அல்லது அவ்வாறு பயன்படுத்துவாரானால், அல்லது

(b) வேளாண்மைத் தகுதிப்பாடு ஒன்றினைப் பெற்றிராமல், அத்தகைய தகுதிப்பாட்டினை காட்டுகிற அல்லது குறிப்பாக சுட்டிக்காட்டுகிற பட்டம் ஒன்றையோ அல்லது சுருக்க குறியீடு ஒன்றையோ பயன்படுத்துவாரானால், முதல் முறையாகக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதின் பேரில் அவர் ஐந்தாயிரம் ரூபாய் வரை போகக் கூடிய பணத்தண்டனை விதித்து, மற்றும் அடுத்துப் பின்னர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுவது எதனின் பேரிலும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கக்கூடிய சிறை தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத பணத்தண்டனை அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுவதாதல் வேண்டும்.

பதிவுச் சான்றிதழினை ஒப்படைக்கக் தவறுதல்.

**33.** பதிவேட்டிலிருந்து தமது பெயர் நீக்கப்பட்டிருக்கிற நபர் எவரும், ஒழுங்குமுறை விதியில் வகைசெய்யப்பட்ட கால அளவிற்குள்ளாக போதிய காரணம் எதுவுமின்றி, பதிவுச் சான்றிதழை ஒப்படைக்கத் தவறுவராயின், அவர் ஐநூறு ரூபாய் வரை போகக்கூடிய பணத்தண்டனை விதித்தும் மற்றும் தொடர்ச்சியான குற்றச் செயலின் நேர்வில் அக்குற்றச் செயல் தொடர்கிற கால அளவின்போது முதல் நாளுக்குப் பின்னர் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதி எதற்கும் ஒரு நூறு ரூபாய் வரை போகக் கூடிய கூடுதல் பணத்தண்டனை ஒன்று விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

குற்றச் செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

**34.** இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத் தக்க குற்றச் செயல் எதனையும் அரசின் அல்லது மன்றத்தின் ஆணை ஒன்றினால் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் அல்லாமல் நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

## அத்தியாயம்–VII.

### பல்வகை

**35.** (1) மன்றத்தின் கணக்குகள் ஒழுங்குமுறை விதியில் வகை செய்யப்பட கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய படிவத்திலும் பேணிவரப்படுதல் வேண்டும். மன்றமானது, ஒழுங்குமுறையில் வகை செய்யப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர உரை ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும். கணக்குகளும் தணிக்கையும்.

(2) மன்றத்தின் கணக்குகள் இது குறித்து அரசு நியமிக்கக் கூடிய அத்தகைய தணிக்கையாளரால் ஓர் ஆண்டுக்கு ஒரு முறை தணிக்கைச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) (2)–ஆம் உட்பிரிவின் படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர், அத்தகைய தணிக்கை தொடர்பாக, ஒழுங்குமுறை விதியில் வகைச்செய்யப்படக் கூடிய வரையிலான அத்தகைய உரிமைகள், சிறப்புரிமைகள், அதிகாரம், அதிலும் குறிப்பாக புத்தகங்களை, கணக்குகளை தொடர்புள்ள சான்றுச் சீட்டுக்களை மற்றும் பிற ஆவணங்களை முன்னிடுமாறு கோரும் உரிமையையும் மன்றத்தின் அலுவலர்கள் எவரையும் ஆய்வு செய்வதற்கான உரிமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) செயலாளரானவர் தணிக்கையாளரின் அறிக்கையை அச்சிடச் செய்வதற்கு ஆவன செய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய அறிக்கையினை மன்றத்தின் முன்பு அதன் அடுத்தக் கூட்டத்தில் பரிசீலனை செய்வதற்காகக் கொண்டு வருதல் வேண்டும்.

(5) மன்றமானது, தணிக்கையாளரால் குறிக்கப்படக்கூடிய தவறுகள் அல்லது முறைகேடுகள் எவற்றையும் உடனடியாக தீர்வுச் செய்தல் வேண்டும்; மற்றும் அதன் மீது அறிக்கை ஒன்றினை அரசுக்குப் பணிந்து அனுப்புதல் வேண்டும்.

**36.** (1) மன்றமானது அரசு கோரக்கூடிய அத்தகைய அறிக்கைகள் அதன் கூட்ட நடவடிக்கை குறிப்புகளின் நகல்கள் அதன் கணக்குகளின் சுருக்கக்குறிப்பு, பிற தகவல் ஆகியவற்றை அரசுக்கு அளித்தல் வேண்டும். மன்றத்தினால் அளிக்கப்பட வேண்டிய தகவலும் அதனை வெளியிடுதலும்.

(2) அரசானது இந்தப் பிரிவின்படி வழங்கப்பட்ட அறிக்கை, நகல், சுருக்கக்குறிப்பு அல்லது பிற தகவலை அது கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் வெளியிடலாம்.

**37.** பதிவேடு ஒன்றில் பெயர் ஒன்றினை பதிவு செய்வதற்கு மறுக்கிற அல்லது பதிவேட்டிலிருந்து பெயர் ஒன்றினை நீக்குகிற ஆணை எதுவும், நீதிமன்றம் எதிலும் எதிர்க்கப்படுதல் கூடாது. அதிகார வரம்பிற்கான தடை.

**38.** நபர் எவருக்கும் எதிராக, இந்தச் சட்டத்தினை, அதன்படி செய்யப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதி அல்லது ஆணை எதனையும் ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ய கருதப்பட்ட எதற்காகவும் உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**39.** இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணையொன்றின் வாயிலாக அவ்விடப்பாட்டினை நீக்குவதற்குத் தேவையானவையென்றோ அல்லது உகந்தவையொன்றோ தமக்குத் தோன்றக்கூடிய ஆனால், இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகை முறைகளைச் செய்யலாம். இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரை :**

ஆனால், அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

**40.** அரசானைது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக அது தக்கதெனக் கருதக்கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைக்கு முரணாக இல்லாத அத்தகைய பணிப்பாணைகளை அவ்வப்போது மன்றத்திற்கு பிறப்பிக்கலாம்; மன்றமானது அத்தகைய பணிப்பாணைகளுக்கிணங்கி நடத்தல் வேண்டும். பணிப்பாணை வழங்குவதற்கு அரசுக்குள்ள அதிகாரம்.

ஆணையத்தில் நியமனம்.

**41. (1)** மன்றமானது இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றுக்கும் இணங்கி நடக்கவில்லை என அரசுக்கு தோன்றுகிறபோதெல்லாம் அரசானது மூன்று நபர்களைக் கொண்ட ஆணையம் ஒன்றினை, அதாவது ஒருவர் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருத்தல் வேண்டும் என்ற நிலையில் அவர்களுள் இருவர் அரசினால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதாகவும் கொண்ட மற்றும் மன்றத்தினால் பெயரிடப்பட்ட ஒருவரையும் கொண்ட ஆணையம் ஒன்றினை நியமித்தல் வேண்டும் ; மற்றும் எந்தப் பொருட்பாட்டின் மீது விசாரணையானது செய்யப்பட வேண்டுமோ அந்தப் பொருட்பாட்டினை ஆணையத்திற்குச் சாட்டி அனுப்பலாம்.

(2) அந்த ஆணையமானது அதற்கு சாட்டி அனுப்பப்பட்ட பொருட்பாடுகளின் பேரில் சுருக்கமானதொரு முறையிலான விசாரணயை மேற்கொண்டு ஆணையம் பரிந்துரை செய்வதற்கு விரும்பக் கூடியவாறான அத்தகைய தீர் வழிகள் எவையேனும் இருப்பின் அவற்றையும் சேர்த்து அரசுக்கு அறிக்கை கொடுத்தல் வேண்டும்.

(3) அரசானது அந்த அறிக்கையை ஏற்கலாம் அல்லது அதனை மாற்றியமைப்பதற்காக அல்லது மறு பரிசீலனை செய்வதற்காக ஆணையத்திற்குத் திருப்பி அனுப்பலாம். அறிக்கையானது இறுதியாக ஏற்கப்பட்டதற்குப் பின்னர், அரசானது ஆணையில் குறித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய கால அளவிற்குள்ளாக அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட தீர்வழிகளை மேற்கொள்ளுமாறு மன்றத்திற்கு ஆணையிடலாம்; மற்றும் மன்றமானது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக அதற்கு இணங்கிய வகையில் நடக்கத் தவறுமானால், அரசானது ஆணையத்தின் பரிந்துரைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்குத் தேவையானதாக இருக்கக் கூடிய அத்தகைய ஆணைகளைப் பிறப்பிக்கலாம் அல்லது அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

42. (1) அரசானது இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட்ட அனைத்து விதிகளும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும், அவைகள் ஒரு குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்னர் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடரோ அல்லது அடுத்த கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர், அந்த விதியிலோ அல்லது ஆணையிலோ அல்லது அறிவிக்கையிலோ மாற்றம் எதையேனும் அச்சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அல்லது அந்த விதியோ, அல்லது ஆணையோ அல்லது அறிவிக்கையோ செய்யப்படுதலோ, பிறப்பிக்கப்படுதலோ அல்லது வெளியிடப்படுதலோ ஆகாது என்றும் சட்டமன்றப் பேரவையானது முடிவு செய்யுமாயின் அந்த விதியோ அல்லது ஆணையோ அல்லது அறிவிக்கையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல் விளைவு பெறுதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப செயல் விளைவு பெறாது போதல் வேண்டும்; எனினும் அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையின்படி முன்பே செய்யப்பட்ட எதினின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.**

**43.** (1) மன்றமானது அரசின் முந்தைய ஏற்பளிப்புடன் இந்தச் சட்டத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்கான இந்தச் சட்டத்தின் மற்றும் 42 ஆம் பிரிவின் படி செய்யப்பட்ட விதிகளுக்கு முரணாக இல்லாத வகையில் ஒழுங்கு முறை விதிகளைச் செய்யலாம்.

(2) ஒழுங்குமுறை விதி அல்லது அதன் நீக்கம் அல்லது மாற்றம் எதுவும் அரசினால் ஏற்பளிக்கப்படுவது வரையில் செயல் விளைவு கொள்ளுதல் கூடாது.

(3) அரசானது அறிவிக்கையின் வாயிலாக, இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி எதனையும் நீக்கம் செய்யலாம்; மற்றும் அதன் பேரில் அந்த ஒழுங்குமுறை விதியானது செயல்விளைவு கொள்வது அற்றுப் போதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் ; மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**இணைப்புப் பட்டியல்**

[2(4), 14(1) ஆகிய பிரிவுகளைக் காணவும்]

**ஏற்பளிக்கப்பட்ட வேளாண்மைத் தகுதிப்பாடு**

| *வ. எண்* | *நிலையம்* | *தகுதிப்பாடு* | *பதிவு செய்வதற்கான சுருக்கக் குறியீடு* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | சென்னைப் பல்கலைக் கழகம் | இளங்கலை அறிவியல் (வேளாண்மை) | பி.எஸ்.சி. (வேளாண்மை) |
| 2 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | இளங்கலை அறிவியல் (வேளாண்மை) | பி.எஸ்.சி. (வேளாண்மை) |
| | | இளங்கலை அறிவியல் (வனவியல்) | பி.எஸ்.சி. (வனவியல்) |
| | | இளங்கலை அறிவியல் (தோட்டக்கலை) | பி.எஸ்.சி. (தோட்டக்கலை) |
| | | இளங்கலை அறிவியல் (மனையியல்) | பி.எஸ்.சி. (மனையியல்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (உயிர்தொழில் நுட்பம்) | பி.டெக். (உயிர் தொழில் நுட்பம்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (வேளாண்மை பொறியியல்) | பி.டெக். (வேளாண்மை பொறியியல்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (வேளாண்மை தகவல் தொழில் நுட்பம்) | பி.டெக். (வேளாண்மை தகவல் தொழில் நுட்பம்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (உயிர் தகவலியல்) | பி.டெக். (உயிர் தகவலியல்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (சக்தி மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல்) | பி.டெக். (சக்தி மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (உணவு பதப்படுத்தும் பொறியியல்) | பி.டெக். (உணவு பதப்படுத்தும் பொறியியல்) |
| | | இளங்கலை தொழில் நுட்பம் (தோட்டக்கலை) | பி.டெக். (தோட்டக்கலை) |
| | | இளங்கலை அறிவியல் (வேளாண் வர்த்தக மேலாண்மை) | பி.எஸ். (வேளாண் வர்த்தக மேலாண்மை) |
| 3 | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் | இளங்கலை அறிவியல் (வேளாண்மை) | பி.எஸ்.சி. (வேளாண்மை) |
| | | இளங்கலை அறிவியல் (தோட்டக்கலை) | பி.எஸ்.சி. (தோட்டக்கலை) |

## நோக்க காரண விளக்கவுரை

தமிழ்நாடு மாநிலத்தில் வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதற்கு வகை செய்வதற்கான சட்டம் எதுவும் தற்போது இல்லை. எனவே வேளாண்மைத் தொழிலை முறைப்படுத்துவதும் இம்மாநிலத்தின் வேளாண்மை தொழிலாற்றுநர்களை பதிவு செய்வதும் தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றம் என அழைக்கப்பெறும் மன்றம் ஒன்றை அமைத்துருவாக்குவதும் தேவையானதெனக் கருதப்பட்டுள்ளது. அரசானது, இந்நோக்கத்திற்காக சட்டமொன்றை இயற்றுவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,**
*வேளாண்மைத் துறை அமைச்சர்.*

## நிதிபற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவு சட்டமாக இயற்றப்படும்போது, தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றத்தை அமைப்பதற்காக மாநிலத் தொகு நிதியிலிருந்து செலவு செய்ய நேரிடும். கருதியுள்ள இந்த சட்டத்தின் விளைவாக ஏற்படக்கூடிய செலவானது, தொடராச் செலவினமாக இருபது இலட்ச ரூபாய்கள் மட்டுமே என்ற அளவில் இருக்கும்.

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன் வடிவின் 1(3), 3, 4, 14, 15, 16, 22, 23, 39, 40, 42 ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளை, ஆணைகளை அல்லது பணிப்பாணைகளைப் பிறப்பிப்பதற்கோ அல்லது நேர்விற்கேற்ப விதிகளைச் செய்வதற்கோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன; மற்றும் இச்சட்ட முன்வடிவின் 43ஆம் கூறானது, கருதியுள்ள சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒழுங்குமுறை விதிகளைச் செய்ய தமிழ்நாடு மாநில வேளாண்மை மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயென்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.